# செய்தி வெளியீடு

## 2018ம் ஆண்டுக்கான காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் செயலாற்றுகை

**காப்புறுதிக் கட்டுப்பண வருமானம் மற்றும் வளர்ச்சி வீதம்**

இலங்கை காப்புறுதி கைத்தொழிற்துறையினால் 2018ம் ஆண்டு நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் எனும் இரு துறைகளையும் இணைத்து 10.03% மொத்தக் காப்புறுதிக் தவணைக் கட்டண வளர்ச்சியை அடைய முடிந்தது. 2018ம் ஆண்டு இரு துறைகளும் மொத்த தவணைக் கட்டண வருமானமாக ரூபா 181,506 மில்லியனை பெற்றுக்கொண்டுள்ளதுடன், இது 2017ம் ஆண்டு பெற்றுக்கொண்ட ரூபா 164,960 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 16,546 மில்லியன் அதிகமாகும்.

நீண்ட கால காப்புறுதித்துறை 2018ம் ஆண்டு மொத்த காப்புறுதித் தவணைக்கட்டண வருமானமாக ரூபா 80,303 மில்லியனைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன், இது 2017ம் ஆண்டு பெற்றுக்கொண்ட ரூபா 71,571 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 12.20% வளர்ச்சியைப் பெற்றுள்ளது. பொதுக் காப்புறுதி வியாபாரம் 2018ம் ஆண்டு மொத்தக் காப்புறுதித் தவணைக் கட்டண வருமானமாக ரூபா 101,203 மில்லியனைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன், இது 2017ம் ஆண்டு பெற்றுக்கொண்ட ரூபா 93,389 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 8.37% வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் கட்டாய மீள்காப்புறுதி விட்டுக்கொடுத்தலில் இருந்து 2018ம் ஆண்டு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் பெறப்பட்ட மீள்காப்புறுதிக் கட்டண வருமானம் ரூபா 4,056 மில்லியனாக இருந்ததுடன், இது 2017ம் ஆண்டு பெறப்பட்ட மீள்காப்புறுதி தவணைக்கட்டண வருமானமான ரூபா 3,683 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 10.13% எனும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கொண்டுள்ளது. ( வரைபு 1ஐப் பார்க்க)

**காப்புறுதியின் ஊடுறுவல் மற்றும் பரம்பல்**

காப்புறுதியின் ஊடுறுவல், 2018ம் ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் காப்புறுதித் தவணைக் கட்டணத்தின் வீதம் 1.26% ஆக பிரதிபலித்தது. அத்துடன் 2017ம் ஆண்டு 1.23% வீதமாக இருந்த ஊடுறுவலுடன் ஒப்பிடுகையில் 2018ம் ஆண்டு சிறியளவான அதிகரிப்பைக் காட்டுகின்றதுடன், ஆசியப் பிராந்தியத்தின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்த வளர்ச்சி மிகக் குறைவாகவே உள்ளது. 2018ம் ஆண்டு நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் ஊடுறுவல் 0.56% வீதமாகவும் (2017: 0.53%) பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் ஊடுறுவல் 0.70% வீதமாகவும் (2017: 0.70%) இருந்ததுடன், நீண்ட கால காப்புறுதி வியாபாரம் 2017ம் ஆண்டு பதிவுசெய்த வீதத்துடன் ஒப்பிடுகையில் ஓர் சிறியளவு வளர்ச்சியைக் காட்டுகின்றது. காப்புறுதியின் ஊடுறுவலின் மட்டத்தில் செலவழிக்கக்கூடிய வருமான மட்டமானது நேரடி தாக்கத்தைக் கொண்டுள்ளது.

காப்புறுதிப் பரம்பலானது குடித்தொகையில் ஒரு நபரின் காப்புறுதித் தவணைக் கட்டண வருமானத்தைப் பிரதிபலிப்பதுடன், 2018ம் ஆண்டு இது ரூபா 8,376 மில்லியனாக இருந்ததுடன், இது 2017ம் ஆண்டு பதிவுசெய்த ரூபா 7,693 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 8.87% வளர்ச்சியை அடைந்துள்ளது.

**மொத்தச் சொத்துக்கள்**

2017 இல் காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 581,685 மில்லியன் ஆவதுடன், இது 2018ம் ஆண்டு ரூபா 623,477 மில்லியனாக அதிகரித்துள்ளதுடன், இது 7.18% வளர்ச்சியைப் பிரதிபலிக்கின்றது. நீண்ட கால காப்புறுதி வியாபாரச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 429,706 மில்லியன் (2017: ரூபா 391,890 மில்லியன்) ஆவதுடன், வருடாந்த அடிப்படையில் ஒப்பிடுகையில் 9.65% வளர்ச்சியைக் காட்டுகின்றது. பொதுக் காப்புறுதி வியாபாரச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 190,088 மில்லியன் (2017: ரூபா 185,583 மில்லியன்) ஆவதுடன், இது 2.43% வீத வளர்ச்சியைக் காட்டுகின்றது.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் சொத்துக்களின் பெறுமதி ரூபா 3,683 மில்லியன் (2017: ரூபா 4,212) ஆவதுடன், கடந்த ஆண்டு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் மீள்காப்புறுதித்துறை வியாபாரம் 12.56% வீழ்ச்சியைப் பதிவுசெய்கின்றது. மேலும், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் மீள்காப்புறுதி வியாபாரம் தொடர்பான நிதி முதலீடுகளில் குறிப்பிடத்தக்க குறைவு காணப்படுகின்றது.

**காப்புறுதிக் கம்பனிகளினால் ஈடுசெய்யப்பட்ட கோரிக்கைகள்**

நீண்ட கால காப்புறுதி வியாபாரம் மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் என்பவற்றில் ஈடுபட்டுள்ள காப்புறுதிக் கம்பனிகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோரிக்கைகளின் பெறுமதி ரூபா 86,803 மில்லியன் (2017 : 74,178 மில்லியன்) ஆவதுடன், இது மொத்தக் கோரிக்கையில் 17.01% அதிகரிப்பைக் காட்டுகின்றது. முதிர்ச்சி மற்றும் மரணக் கொடுப்பனவுகளை உள்ளடக்கி நீண்ட கால காப்புறுதிக் கோரிக்கைகளின் பெறுமதி ரூபா 34,337 மில்லியன் (2017 : ரூபா 26,371 மில்லியன்) ஆகும். மோட்டார், தீ, கடல் மற்றும் ஏனைய காப்புறுதிகளை உள்ளடக்கி பொதுக் காப்புறுதி வியாபாரத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோரிக்கைகளின் பெறுமதி ரூபா 52,466 மில்லியன் (2017 : ரூபா 47,807 மில்லியன்) ஆகும். 2017ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் நீண்ட கால காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி வியாரத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோரிக்கைகளின் பெறுமதி முறையே 30.21% மற்றும் 9.74% வீதத்தினால் அதிகரித்துள்ளது. ( வரைபு 3ஐப் பார்க்க)

**காப்புறுதிக் கம்பனிகளின் இலாபம்**

இவ்வருடத்தில் வட்டி வீத சூழலில் காணப்பட்ட ஏற்ற இறக்கங்கள் மற்றும் ஏனைய பொருளாதார இடையூறுகள் காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் இலாபத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியதுடன், பயிர் காப்புறுதி இலாபம் ரூபா 229 மில்லியன் (2017 : ரூபா 128 மில்லியன்) மற்றும் மீள்காப்புறுதி வியாபாரம் ரூபா 1,342 மில்லியன் ( 2017: ரூபா 136 மில்லியன்) போன்ற தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் இலாபங்கள் உள்ளடங்களாக வரிக்கு முன்னரான மொத்த இலாபமாக ரூபா 37,017 மில்லியனை (2017: ரூபா 49,084) பதிவுசெய்தது. நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் இலாபமான ரூபா 24,127 மில்லியனுக்கான (2017: ரூபா 39,349 மில்லியன்) பங்களிப்பு பிரதானமாக ஜனசக்தி லைப் நிறுவனத்தினால் ஜனசக்தி ஜெனரலின் துணை முதலிடுகளின் அகற்றலில் இருந்து பெற்றப்பட்ட குறிப்பிட்ட இலாபத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

2017 இல் ஒரு தடவைக்கான மிகைக்கான நடவடிக்கைகள் மற்றும் அடையாளம் காணல் நோக்கத்திற்காக 16ம் இலக்க பணிப்புரையை ஆணைக்குழு விநியோகித்தது. அதற்கமைவாக, பணிப்புரையில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்காக பங்குபற்றும் வியாபாரத்தைத் தவிர்த்து 31 டிசம்பர் 2017ம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான பங்குதாரர்களின் பங்குக்கு சில பிரதான நீண்ட கால காப்புறுதிக் கம்பனிகள் ஒரு தடவைக்கான மிகைகளை மாற்றத் செய்தன. ஒற்றை மிகை மாற்றத்தின் விளைவாக, நீண்ட கால காப்புறுதியாளர்களின் இலாபமானது 2017ம் ஆண்டு ரூபா 39,349 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 67.57% வீதம் அதிகரித்தது.

பொதுக் காப்புறுதி வியாபாரத்திற்கான இலாபம் ரூபா 11,318 மில்லியனாவதுடன் (2017: ரூபா 9,469 மில்லியன்) கைத்தொழிற்துறையில் உள்ளவர்களுக்கு இடையிலான போட்டி மற்றும் விலை அழுத்தங்களுக்கிடையில் பொதுக் காப்புறுதி வியாபாரம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 19.52% வீதம் வளர்ச்சியடைந்துள்ளது.

**முரண்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் விசாரணைகள்**

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் பிரதான குறிக்கோளான காப்புறுதி பூட்கையாளர்களைப் பாதுகாத்தல் என்பதற்கமைவாக, ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதிக் கொள்கைகளின் கீழ் காப்புறுதிக் கொள்கைகள் தொடர்பாக எழுந்துள்ள காப்புறுதி பூட்கையாளர்களின் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை சபை மேற்கொள்கின்றது. இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல ஆணைக்குழு காப்புறுதியாளர், தரகர் அல்லது முகவருக்கு எதிராக கிடைக்கப்பெற்ற ஏனைய முறைப்பாடுகளையும் விசாரணை செய்கின்றது. ஆணைக்குழுவிற்கு 2018ம் ஆண்டு 247 புதிய முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றது. இக்காலப்பகுதியில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் முன்கொண்டுவந்த முறைப்பாடுகள் உள்ளடங்களாக 295 முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டன. இக்காலப்பகுதியில் சபையின் தலையீடு

காரணமாக தீர்க்கப்பட்ட கோரிக்கைகளின் மொத்தப் பெறுமதி அண்ணளவாக ரூபா 38 மில்லியன் ஆகும்.


**காப்புறுதியாளர்கள்**

31 டிசம்பர் 2018ம் திகதி செயற்பட்ட இருபத்தி ஐந்து (25) காப்புறுதிக் கம்பனிகளில் (காப்புறுதியாளர்கள்), பன்னிரெண்டு (12) கம்பனிகள் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தை மட்டும் மேற்கொள்வதுடன், பதினொரு (11) கம்பனிகள் பொதுக் காப்புறுதி வியாபாரத்தை மட்டும் மேற்கொள்ளுகின்றன, அதேவேளை இதில் இரண்டு (02) கம்பனிகள் இணைந்த கம்பனிகளாகும் (இவை பொது மற்றும் பன்னிரெண்டு கம்பனிகள் நீண்ட கால காப்புறுதி வியாபாரங்கள் எனும் இரண்டினையும் இணைத்து மேற்கொள்ளுகின்றன).


**காப்புறுதித் தரகர்கள்**

அறுபத்தி ஐந்து (65) காப்புறுதித் தரகுக் கம்பனிகள், ஆணைக்குழுவில் பதிவு செய்து சந்தையில் செயற்பட்டதுடன், தவணைக் கட்டண வருமானமாக ரூபா 25,063 மில்லியனை உழைத்துக்கொண்டன. 2017ம் ஆண்டு காப்புறுதித் தரகு வியாபாரம் உழைத்துக்கொண்ட ரூபா 21,479 மில்லியன் தவணைக் கட்டண வருமானத்துடன் ஒப்பிடுகையில் 2018ம் ஆண்டு 16.69% வளர்ச்சியை பதிவுசெய்தது. மேலும் நீண்ட கால காப்புறுதி வியாபாரம் மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் ஊடாக முறையே ரூபா 655 மில்லியன் மற்றும் ரூபா 24,408 மில்லியன் தவணைக் கட்டண வருமானத்தைப் பெற்றுக்கொண்டன.


**வரைபு 1 : மொத்த காப்புறுதி கட்டுப்பண வருமானம்**





**வரைபு 2 : மொத்த சொத்துக்கள்**



**வரைபு 3 - காப்புறுதிக் கம்பனிகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோரிக்கைகள்**




**வரைபு 4 -ஒரு தடவை மிகை மாற்றத்தின் பின்னர் காப்புறுதிக் கம்பனிகளின் இலாபம் ( வரிக்கு முன்னர்) (ரூ.மில்)**



*குறிப்பு:*

1) *2018 – தற்காலிக புள்ளிவிபரங்கள்*
2) *2017 – மீட்டெடுக்கப்பட்ட கணக்காய்வு புள்ளிவிபரங்கள்*
3) *2017ம் ஆண்டு உள்ளக பிரிவு கொடுக்கல்வாங்கல்கள் ( ஆயுள் மற்றும் பொது) நீங்கல்கள் தாக்கம் எதனையும் ஏற்படுத்தவில்லை*
4) *மொத்த இலாபமானது பயிர் மற்றும் மீள்காப்புறுதி இலாபங்களான ரூகா 229 மில்லியன் (2017: ரூபா 128 மில்லியன்) மற்றும் ரூபா 1342 மில்லியன் ( 2017: ரூபா 136 மில்லியன்) என்பவற்றின் வரிக்கு முன்னரான இலாபத்தை உள்ளடக்கியுள;sJ.*


**இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு**

**11வது மாடி, கிழக்கு கோபுரம்**

**உலக வர்த்தக மையம்**

**கொழும்பு 01**

| | |
|---|---|
| ,ணையத்தளம;:www.ircsl.gov.lk | மின்னஞ்சல;: info@ircsl.gov.lk |
| தொலைபேசி: 011 2396184 - 9 | தொலைநகல;: 011 2396190 |


**04/12/2019**